IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE NO.I, HOSUR

**OS NO.246-2008**

Deposition DW 2 witness for Plaintiffs / Defendant / Respondent Solemnly affirmed and sworn by Thiru. S. Chandru Grade III Bench Clerk on 11.06.2025 accordance with the provisions with the Act of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name : | திரு.கிருஷ்ணப்பா | Father's Name : | திரு.முனியப்பா |
| Village : | | Taluk : | |
| -- | | Calling : | |
| -- | | Age : | 48 |
| பி.வா.சா. : | 2 | | |

The Hon'ble Supreme Court by *virtue* of General Order in Transfer Petition (CIVIL) No.1957 oF 2023, has ordered the subordinate Courts to stop the practice of mentioning the caste or religion of litigants in case papers. In compliance, such information of the Witnesses has neither been obtained nor mentioned in the deposition.

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :

**1.** நான் எந்த சர்வே எண்ணில் எவ்வளவு சொத்தை கிரயம் வாங்கியுள்ளேன் என்றால் சர்வே எண்.10/1 ல் மொத்தம் உள்ள 1 ஏக்கர் 1 செண்ட்யை கிரயம் வாங்கியுள்ளேன். யாரிடம் இருந்து கிரயம் வாங்கினேன் என்றால் 1 ம் பிரதிவாதி திரு.நஞ்சப்பா என்பரிடமிருந்து கிரயம் வாங்கினேன். நான் இந்த வழக்கில் 18 ம் பிரதிவாதி என்றால் சரிதான். இந்த வழக்கில் எந்தசொத்துக்களுக்குக்காக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சர்வே எண்.10/1 மற்றும் 78/10 ல் உள்ள சொத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நான் 1 ம் பிரதிவாதியும், சேவகானபள்ளிஅஞ்சல் கக்கனூர் கிராமத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். நானும் 1 ம் பிரதிவாதியும் உறவினர்கள் இல்லை ஒரே ஊரைச்சேர்ந்தவர்கள். 1 ம் பிரதிவாதியை எனக்கு நன்கு தெரியும். 1-ம்பிரதிவாதிக்கு விற்பனை செய்தவர்கள் யார் என்றால் ஸ்ரீராமுலு அவருடைய பிள்ளைகள் மற்றும் முனியப்பா, பொது அதிகாரம் பெற்றவரான கிருஷ்ணப்பா ஆகியோர் விற்பனை செய்தார்கள். மேற்சொன்ன ஸ்ரீராமுலு அவருடைய குடும்மபத்தார்கள் மற்றும் முனியப்பா அவருடைய குடும்பத்தார்கள் அனைவரும் ஒருவருக்கொருவர் நன்கு தெரிந்தவர்கள்.

2. அவர்கள் அனைவரும் உறவினர்களா என்று எனக்கு தெரியாது. நான் வழக்கு சொத்தை 2008 ம் ஆண்டு வாங்கினேன். 1 ம் பிரதிவாதி நஞ்சப்பா 2007 ம்ஆண்டில் கிரயம் வாங்கினார். நான் வழக்கு சொத்ை◌தை கிரயம் வாங்கிய போது 1 ம் பிரதிவாதி பெயரில் பட்டா இருந்தது. நான் கிரயம் வாங்கிய காலத்தில் வழக்கு சொத்திற்கான பட்டா சம்பந்தமாக விசாரணை நடந்துவந்தது என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. நான் சொத்தைகிரயம் வாங்கியபோது, ஸ்ரீராமுலு மற்றும் குடும்பத்தார்கள் பற்றி விசாரணை செய்து தான் கிரயம் வாங்கினேன். 9 ம் பிரதிவாதி ஸ்ரீராமுலுவின் த.பெ.முனிவெங்கடப்பா என்றால் சரிதான். மேறசொன்ன முனிவெங்கடப்பா என்பவர் எல்லப்பா என்பவரின் மகன் என்றால் சரிதான். எல்லப்பா என்பவர் வெங்கடப்பாவின் மருமகன் ஆவர். வெங்கடப்பாவின் மகள்கள் பெயர்கள் எல்லோஜியம்மா மற்றும் முனியம்மா ஆகியோர் ஆவர். மேற்சொன்ன முனியம்மாவிற்கு திருமணம் ஆகி குழந்தைகள் இல்லாமல் இறந்து விட்டார் அவருடைய கணவரும் இறந்து விட்டார். எல்லோஜியம்மாவின் கணவர் பெயர் எல்லப்பா ஆவர். 2, 4 முதல் 17 பிரதிவாதிகள் ஆகியோர் மேற்சொன்ன எல்லப்பா மற்றும் எல்லோஜியம்மாவின் வாரிசுகள் என்றால் சரிதான்.

3. நான் சொத்தை கிரயம் வாங்கியபோது, வழக்கு சொத்து 9 ம் பிரதிவாதிகுடும்மபத்தாருக்கு பாத்தியப்பட்டது என்பதற்கான என்ன ஆவணம் பார்த்தேன் என்றால் அவர்கள் குடும்பத்தாருக்குள் ஏற்பட்ட பாகப்பத்திரம் மற்றும் யு.டி.ஆர்க்கு முந்தைய பாகபத்திரத்தை பார்த்தேன். நான் சொல்லும் பாகப்பத்திரத்தில் யார் யாருக்கு எவ்வளவு சொத்து பாகமாக கிடைத்தது என்றால் 9 ம் பிரதிவாதி ஸ்ரீராமுலுக்கு 55 சென்டும், 5 ம் பிரதிவாதி ராஜப்பாவிற்கு 55 செண்டும் பாகமாக கொடுக்கப்பட்டது. அவ்வாறு பாகம் பிரித்துக்கொண்டவர்கள் சொத்தை வடக்கு தெற்காக பிரித்துக்கொண்டார்களா அல்லது கிழக்கு மேற்காக பிரித்துக்கொண்டார்களா எனறால் பாகப்பத்திரத்தில் செக்குபந்தி சொல்லப்படவில்லை. பாகப்பத்திரத்தில் வடக்கு பக்கம் ராஜப்பாவிற்கும், தெற்கு பக்கம் ஸ்ரீராமுலுவிற்கும் பாகம் ஒதுக்கப்பட்டது என்றால் நான் அதை பார்க்கவில்லை. 3 ம் பிரதிவாதி கோபால்ரெட்டியை எனக்கு தெரியாது. 3 ம் பிரதிவாதிக்கும் வழக்கு சொத்திற்கம் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் வழக்கு சொத்தை 3 ம் பிரதிவாதி ராஜப்பாவிடமிருந்து கிரயம் வாங்கியுள்ளார். 3 ம் பிரதிவாதி கிரயம் வாங்கிய பத்திரத்தில் உள்ள செக்குபந்தி தெரியுமா என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. நான் பார்த்ததாக சொல்லும் யு.டி.ஆர் பட்டா யார் பெயரில் இருந்தது என்றால் முனிவெங்கடப்பா மற்றும் குல்லப்பா ஆகியோர் பெயரில் இருந்தது. மேற்சொன்ன முனிவெங்கடப்பா என்பவர் எல்லோஜியம்மாவின் மகன் என்றால் சரிதான். வழக்கு சொத்திற்கு யு.டி.ஆர்க்கு முன்பு பத்திரத்தை பார்த்துள்ளேனா என்றால் இல்லை.

**4.** 2, 4 முதல் 17 பிரதிவாதிகள் குடும்பத்தார்களுக்கு வழக்கு சொத்துக்களில் தெற்கு புறம் மட்டுமே உரிமை உள்ளது என்றால் சரியல்ல. வழக்கு சொத்து அமைந்துள்ள சொக்கரசனப்பள்ளி கிராமம் ஆனது இனாம் கிராமம் என்றால் எனக்கு தெரியாது. வழக்கு கிராமத்தில்செட்டில்மெண்ட்

சர்வே நடந்தது என்றால் சரிதான். வழக்கு சொத்தை பொறுத்து செட்ட்டில்மெண்ட் நடந்தது என்றால் எனக்கு தெரியாது. வழக்கு சொத்தின் சர்வே எண்.10/1 ற்கு சேலம் உதவி செட்டில்மெண்ட் அதிகாரி குல்லப்பன் மகன் எல்லப்பா மற்றும் வெங்கடரமணப்பா மகன் அன்னைய்யா ஆகியோருக்கு பட்டா வழங்கியுள்ளார் என்றால் பட்டா வழங்கிய விவரம் தெரியும். அது 1970 -ம் ஆண்டுகளுக்கு முன்பு வழங்கியது ஆகும். அவ்வாறு மெற்சொன்ன நபர்கள் பெயரில் வழங்கிய பட்டா குறித்து எனக்கு எப்போது தெரியும் என்றால் நான் சொத்தை கிரயம் வாங்கியபிறகு தெரியும். அந்த பட்டாவைப்பற்றி 1 ம் பிரதிவாதிக்கு தெரியுமா என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. 1975 ம் ஆண்டி,ல சர்வே எண்.10/1 ற்கு பட்டா பர்ஸ் புத்தகம் வா.சா.ஆ.6 வழங்கிய போது அன்னைய்யாவிற்கு பாகம் இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது.

5. வாதிகள் மேற்சொன்ன அன்னையாவின் வாரிசுகள் ஆவர். 1, 2 வாதிகள் அன்னையாவின் பிள்ளைகள். அன்னையாவிற்கு முனியப்பா என்ற ஒரு மகன் இருந்தார் என்றால் சரிதான். அவருடைய மனைவி மற்றும் மகன் தான் 3, 4 வாதிகள் என்றால் சரிதான். சர்வே எண்.10/1 ல் வடக்கு பக்கம் 51 சென்டிற்கும், சர்வே எண்.78/10 ல் வடக்கு பக்கம் 25 1/2 செண்டிற்கு வாதிகள் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். மேற்சொன்ன அன்னையா மற்றும் எல்லப்பா ஆகியோருக்கு இடையில் வாய் மொழி பாகம் ஏற்பட்டது என்றாலும், அந்த பாகத்தில் வடக்கு பக்கம் அன்னையாவிற்கும், தெற்கு பக்கம் எல்லப்பாவிற்கும் பாகம் பிரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. வெங்கடரமணப்பா மற்றும் வெங்கடப்பா ஆகியோருக்கு இடையில் தான் பாகம் பிரிக்கப்பட்டது. மேற்சொன்ன வெங்கடரமணப்பா மற்றும் வெங்கடப்பா ஆகியோர் சகோதரர்கள் ஆவர். குல்லப்பா மகன் எல்லப்பா என்பவர் வெங்கடரமணப்பாவின் மாமா ஆவர்.

6. எல்லோஜியம்மாவின் தந்தை வெங்கடப்பாவும், வாதிகளின் தாத்தா வெங்கட்ரமணப்பா ஆகியோரும் அண்ணன் தம்பிகள் ஆவர். வாதிகளின் தாத்தா வெங்கடரமணப்பா இறந்தபிறகு அவருடைய மகன் அன்னையாவிற்கும், எல்லோஜியம்மாவின் தந்தை வெங்கடப்பாவிற்கும் வாய்மொழி பாகம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. அந்த வாய் மொழி பாகத்தில் தான் அன்னையாவிற்கு வடக்கு பக்கம் பாகம் ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 பாகப்பத்திரத்தில் வழக்கு சொத்தில் தெற்கு புறம் பாதி சொத்தை பொறுத்து பாகம் பிரித்துக்கொண்டது மட்டுமே செல்லும் என்றாலும், வடக்கு பக்கம் உள்ள சொத்தை 5-ம் பிரதிவாதி ராஜப்பாவிற்கு ஒதுக்கியது செல்லாது என்றாலும் சரியல்ல. தற்போதும் வழக்கு சொத்தில் வாதிகள் சுவாதீணத்தில் இருந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல.

7. நான் வழக்கு சொத்து முழுவதிலும் சுவாதீணத்தில் உள்ளதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. என் பெயரில் உள்ள கிரய பத்திரம் செல்லாது என்றால் சரியல்ல. வழக்கு சொத்து வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்பதை தெரிந்து கொண்டு அந்த சொத்தை அபகரிக்க வேண்டும் என்பதற்காக என் பெயரில் பொய்யான கிரய பத்திரம் தயாரித்துகொண்டேன் என்றால் சரியல்ல.

வழக்கு சொத்திற்கான கிரய தொகையை செலுத்தவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை அபகரிக்க வேண்டும் என்பதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்தபிறகு நான் கிரயம் வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பே நான் கிரயம் வாங்கிவிட்டேன். நான் 04.08.2008 தேதியன்று சொத்தை கிரயம் வாங்கினேன். எனக்கு 2008 ம் வருடம் 10 மாதத்தில் 1 ம் பிரதிவாதிக்கு சம்மன் வந்தது. 1 ம் பிரதிவாதிக்கு சம்மன் வந்த விவரம் எனக்கு எப்படி தெரியும் எனறால் 1-ம்பிரதிவாதி என்னிடம் சொன்னார். நானும் 1-ம் பிரதிவாதியும் கூட்டு சேர்ந்து பத்திரம் தயார் செய்துள்ளோம் என்றாலும், 2007 ம் ஆண்டிலேயே இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை இல்லை.</u>**

(ஒம்/-ஆர்.நரசிம்மமூர்த்தி)
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றையியல்
நீதித்துறை நடுவர் எண்.1, ஒசூர்.